1967 ஜூலை 8]

திரு. கொளத்தூர் கோதண்டம்: எந்தெந்த ஊர்களில் இந்த பஸ் விடப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை தெரிவிக்க வேண்டு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்பொழுது இந்த ஜீப் பஸ்கள் இரண்டு இடங்களில்தான் விடப்படுகின்றன. மதுரை மாவட்டம் திண்டுக்கல்லிலிருந்து சிறுமலை வரை. கோவை மாவட்டத்திலே பண்ணாரியிலிருந்து தாளவாடிக்கு திம்பம், தலைமலை வழியாக ஜீப் பஸ்கள் விடப்படுகின்றன.

திரு செ. பாலசுப்பிரமணியன்: கோவை மாவட்டத்தில் கிராமப் புறங்களில் அதிகப்படியான பஸ் வசதி இல்லாததால் கோவை மாவட்டத்தில் மேலும் இந்த மாதிரி பஸ்களை அதிகரிப்பதற்குச் சர்க்கார் அனுமதிதர முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதுபற்றிய கோரிக்கைகள் எதுவும் வரவில்லை. வந்தால் அதுபற்றி ஆராயப்படும்.

திரு. வெ. முனுசாமி: தலைவரவர்களே, இந்த வேன் பஸ்கள் எவ்வளவு மைல் நீளம் போகலாம் என்று வரையறை உண்டா? எல்லா கிராமங்களையும் தொடர்பு படுத்துகிற வகையில் இந்தத் திட்டத்தை அமலாக்க முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பெரிய நவீன பேருந்து வண்டிகள் செல்ல முடியாத காடுமுரடான பிரதேசங்களில் ஜீப் பஸ்கள் போகக்கூடிய அளவு செம்மைப்படுத்திய பிரதேசங்களில் மட்டும் அவை போகலாம். கிராமங்களை இணைக்கத்தக்க அளவுக்கு இருந்து, அதுபற்றிய கோரிக்கைகள் வருமானால் அவைபற்றி ஆராயப்படும் என்று முன்பே சொன்னேன்.

திரு. கே. சகாதேவ கண்டர்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, திருவண்ணாமலையிலிருந்து 3 மைல், 4 மைல், 5 மைல், தூரத்திலுள்ள கிராமங்களிலிருந்து ஜனங்கள் திருவண்ணா மலைக்கு வர மிக மிகக் கஷ்டப்படுகின்ற நிலை இருப்பதால், அங்கு, திருவண்ணாமலையில் ஓடுகின்ற டவுன் சர்வீஸை 10 மைல் தூரத் திற்கு விஸ்தீரணம் செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்தக் கேள்வி ஜீப் பஸ்களைப் பற்றியது.

Violence in villages

* 206 *Q.*—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Chief Minister be pleased to state the number of villages in which violence has broken out between Harijans and others from 1st March 1967 to 19th May 1967?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: எட்டு கிராமங்கள் (ஆறு கிராமங்களில் ஹரிஜனங்களுக்கும், இந்துக்களுக்கும் மற்ற இரண்டு கிராமங்களில் ஹரிஜனங்களுக்கும், முஸ்லீம்களுக்கும்).

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, இந்த வன்முறை நிகழ்ச்சி நடைபெற்ற கிராமங்களில் ஹரிஜனங்கள் டீக் கடைகள், ஹோட்டல்கள் போன்ற பொது இடங்களில் மற்ற அரசியல் காரணங்களுக்காக நுழையவிட மறுத்ததன் காரணமாக ஏற்பட்டுள்ளது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஆம் எனில் இதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கனம் உறுப்பினர் தன்னுடைய கருத்தைச் சொல்கிறார். டீக் கடைகளில் விடாததால் அந்தக் கலவரங்கள் ஏற்பட்டது என்ற தகவல் சர்க்காரிடத்தில் இல்லை.

திரு. ந. சோமசுந்தரம்: தலைவரவர்களே, இந்தக் கலவரங்களுக்குக் காரணம் அரசியல் குரோதமா? அல்லது ஜாதி வேறுபாடா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இந்தக் கலவரங்களுக்குக் காரணம் மனிதனுடைய கெட்ட சுபாவங்கள்.

Fire accident at Madras

*213 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that a fire broke out in Suryanarayana Chetty Street, Royapuram, Madras, on 1st March 1967;

(*b*) if so, the extent of damage suffered by the hut dwellers in that area; and

(*c*) the kind of help that was rendered to the affected people?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: (அ) ஆம்.

(இ) 210 குடிசைகள் எரிந்து விட்டன. சுமார் 350 குடும்பங்கள் வீடிழக்க நேரிட்டது. சுமார் 50,000 ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்கள் சேதமடைந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.

(உ) இந்த விபத்துக்குள்ளான மக்களுக்கு உடனடியாக மாநகராட்சிப் பள்ளிகளில் இடவசதியளிக்கப்பட்டது. தவிர அவர்களுக்கு உணவளிப்பதற்கான ஏற்பாடுகளும் மாநகராட்சி அதிகாரிகளால் செய்யப்பட்டன. அவர்களுடைய குடிசைகளை மறுபடியும் கட்டிக் கொள்ளவும் துணிகள் வாங்கிக் கொள்ளவும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வருவாய்த்துறை ரூபாய் 40 வீதம் வழங்கியது. ஒரு குடும்பத்திற்கு ஒரு புடவை, ஒரு வேட்டி, ஒரு பனியன், ஒரு துண்டு வீதம் 218 குடும்பங்களுக்கு மீனவத் துறையினால் துணி வழங்கப்பட்டது. நைலான் நூல்களும், பருத்தி நூல்களும் வாங்குவதற்காக மீனவர்களுக்கு ரூபாய் 30,000 (உதவித் தொகை ரூபாய் 15,000 கடனுதவி ரூபாய் 15,000) ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.